ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 27-8-2015 (வியாழக்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

******

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

80. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய குடிமக்கள் சாசனம், 2015. (தமிழ், ஆங்கிலம்)

81. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

82. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

83. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய மக்கள் சாசனம், 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

84. மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)